**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் - 2016**

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மாகாண மட்டத்தில் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கு இயன்றதாக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் ஆகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இவ் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இவ் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல்

அத்துடன் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2016 திசெம்பர் 09 ஆம் திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் 252/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டு கணக்குகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2016 திசெம்பர் 09 ஆந் திகதிய 252/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகள் பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட பதிவேடுகள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் ஒன்பது மாகாண சபைகளால் பேணப்பட்ட புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் உடன்பட்டிருந்தன. கடன் பெறுகைகளிலிருந்து ஏற்பட்ட கிரயங்கள் 2016 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் முறையாக பதிவுசெய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 இன் எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 மே 23 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 200 | 26,000 | 3,306 | 3,285.5 | 7,955 |
| | **200** | **26,000** | **3,306** | **3,285.5** | **7,955** |

செயற்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம், மாகாண சுகாதாரத் துறைக்காக முறையே மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்தை எதிர்கொள்வதற்கு 2016 இன் பாதீட்டு மதிப்பீட்டின் ஊடாக ஒவ்வொரு மாகாண சபைக்கும் ரூபா 365 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. விபரமான கணக்காய்வின் பிரகாரம், தென் மாகாண சபைக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 268.61 மில்லியன் ஒதுக்கீட்டில் 36 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 96.38 மில்லியனான சேமிப்புக்களும் மத்திய மாகாணத்தின் மாகாணத் திறைசேரியின் பொது வைப்புக் கணக்கில் ரூபா 72.10 மில்லியன் தொகை செலவிடப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களிற்கு மருத்துவ உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 156.98 மில்லியன் ஒதுக்கீட்டில் ரூபா 35.37 மில்லியன் தொகை செலவிடப்படாதிருந்தது.

### 4.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், 05 பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டிகள் மற்றும் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் செயற்திட்டத்தால் பௌதீக இலக்குகள் அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டன. மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வுகள், நாட்டின் தொலைவான பகுதிகளிலுள்ள சமூகங்களின் சலுகையளிக்கப்படாத துறைகளிற்கான சுகாதார மற்றும் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் வரை குறிப்பிடப்பட்ட நலன்கள் அடையப்பட்டிருக்கவில்லை என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

(அ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி – 02 இன் பிரகாரம், நியம வழிகாட்டல்களில் குறித்துரைக்கப்பட்ட வசதிகளுடன் 350 பிரதேச வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. ஊவா மாகாணத்தின் தம்பான மற்றும் கென்டகொல்லவில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகளால் நுண்ணிழைப் பிரிப்புத் தடுப்பான்கள் (Defibrillators), ஈசீஜீ (ECG) இயந்திரங்கள், மூச்சுக் குழலுக்குள் குழாய் செருகுவதற்கான (Intubation) உபகரணம், மருத்துவ பரிசோதனை கட்டில்கள் போன்ற அவசர சிகிச்சைப் பிரிவிற்கு அவசியமான உபகரணங்கள் பெறப்பட்டிருக்கவில்லை என்பதை அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகள் வெளிப்படுத்தியிருந்தன. மேலும், பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி – 04 ஆல் வேண்டப்பட்டவாறு ஈ-ஐஎம்எம்ஆர் (e-IMMR) முறைமை ஊடாக வரிசை அமைச்சிற்கு அனுப்பப்பட வேண்டிய அசைவற்ற தகவல்கள் இணையத்தள வசதிகளை அணுக இயலாமை காரணமாக ஊவா மாகாணத்தின் ஹம்பேகமுவ மற்றும் தம்பானவிலுள்ள மாவட்ட வைத்தியசாலைகளால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது 40 ஆண்டு வயதிற்கு மேலாகவுள்ள நபர்களிற்காக தொற்றாத நோய்களை கட்டுப்படுத்துவதற்கும் சலரோகம், உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய் தொடர்பான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சுவதிவி சிகிச்சை நிலையங்களின் தரத்தை முன்னேற்றுவதற்கும் உதவியிருந்தது. ஆண்டிற்கு 52 சுவதிவி சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்ட போதிலும் வட மத்திய மாகாணத்தின் மெதிரிகிரிய மற்றும் தம்புத்தேகமவிலுள்ள ஆதார வைத்தியசாலைகள் மற்றும் கல் அமுன மற்றும் வெலிகந்தவிலுள்ள பிராந்திய வைத்தியசாலைகள் என்பன மீளாய்வாண்டின் போது 21 சிகிச்சை நிலையங்களை விடக் குறைவாகவே நடாத்தியிருந்தன. மேலும், சுகாதார வாழ்க்கைமுறை நிலையங்களிற்குத் தேவையான நீர் விநியோகம் மற்றும் சுகாதாரம், காத்திருப்பதற்கான போதிய இட வசதிகள், பதிவுசெய்தல் மற்றும் பரிசோதனை பகுதிகள் போன்ற அடிப்படை வசதிகள் ஊவா மாகாணத்தின் மெதகம

மாவட்ட வைத்தியசாலையில் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி – 08 இன் பிரகாரம், செயலாற்றல் மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல், வாடிக்கையாளர் திருப்தியை ஆய்வு செய்தல் மற்றும் பதவியணியினருக்கான இயலளவுகளை கட்டியெழுப்புதல் போன்ற தர முகாமைத்துவப் பிரிவின் கீழான நடவடிக்கைகள் ஊவா மாகாணத்தின் புத்தல மாவட்ட வைத்தியசாலையினாலும் சியபலாண்டுவ மற்றும் தனமல்விலவிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களாலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 ஒப்பந்த நிர்வாகம்

சிவில் நிர்மாணம் மற்றும் ஏனைய கொள்வனவு நோக்கங்களிற்காக மாகாண சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் மீதான பரீட்சிப்பு அடிப்படை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வுகளில் வெளிப்பட்ட ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான பலவீனங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

(அ) அனுராதபுர மாவட்டத்திலுள்ள பிராந்திய வைத்தியசாலைகளில் 24 கட்டிடங்களின் நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண வேலைகளிற்காக ரூபா 24.60 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4.55 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மாவட்டத்தின் 05 பிராந்திய வைத்தியசாலைகளில் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண வேலைகள் ஒப்பந்தங்களை வழங்குவதில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும். ஏனைய 11 பிராந்திய வைத்தியசாலைகளில் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண வேலைகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொலன்னறுவை மாவட்டத்தின் பிராந்திய வைத்தியசாலைகளிலுள்ள 33 கட்டிட நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண வேலைகளில் 13 பிராந்திய வைத்தியசாலைகளின் புனர்நிர்மாண வேலைகள் பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 05 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்பக் கட்டங்களில் காணப்பட்டன.

(ஆ) தென் மாகாண சபையின் மாகாண சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், கடன் பெறுகைகளில் அமுல்ப்படுத்தப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது தென் மாகாணத்திலுள்ள மாவட்ட வைத்தியசாலைகளால் வேண்டுகோளிடப்பட்ட ரூபா 10.11 மில்லியன் பெறுமதியான உபகரணம் 2017 யூன் 30 வரையிலும் மாகாண சுகாதார அமைச்சினால் பெறப்பட்டிருக்கவில்லை என்பதை கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கள விஜயங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவான அம்சமொன்றமாக, கடன் பெறுகைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மாகாண சுகாதார அதிகாரிகளால் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரிய வைத்தியசாலைகளின் உண்மையான தேவைப்பாடுகளை கருத்திற்கொள்ளாமல் வைத்திய அதிகாரிகளால் அத்தகைய பல உபகரணங்கள் வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வாளர்களின் கள விஜயங்களில் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறுள்ளன.

(i) ரூபா 21.92 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சை மருத்துவ உபகரணம் 2017 பெப்ரவரி 28 வரையிலும் பயன்படுத்தப்படாது மத்திய மாகாணத்திலுள்ள ஜம்புகஹபிட்டிய, நரம்பனவ, உடுவெல, அங்கும்புர, தலதுஓயா, டெல்தோட்ட, கலஹ, பன்விலதென்ன, ஹசலக, அம்பகஹபெலஸ்ஸ, மொறயாய, கொலொன்கொட மற்றும் உடகம அற்றபகே பிராந்திய வைத்தியசாலைகளினதும் பூஜாபிட்டிய, மெனிகின்ன, தலதுஓயா மற்றும் ஹசலக சுகாதார வைத்திய அதிகாரி அலுவகங்களினதும் களஞ்சியங்களில் காணப்பட்டன. மேலும், மத்திய மாகாணத்திலுள்ள அற்றபகே, முறுதலவ, ஹசலக மற்றும் மொறயாய பிராந்திய வைத்தியசாலைகளிற்காக ரூபா 5.17 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சத்திர சிகிச்சை மருத்துவ உபகரணம் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அவற்றில் ரூபா 2.18 மில்லியன் பெறுமதியான உபகரணம் உத்தரவாதக் காலம் முடிவடைந்த பின்னர் ஏனைய வைத்தியசாலைகளிற்கு மாற்றப்பட்டிருந்தன.

(ii) சப்ரகமுவ மாகாணத்திலுள்ள கஹவத்த மற்றும் களவன ஆதார வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பானது ரூபா 14.33 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 04 சீஆர் முறைமை இயந்திரங்கள் 06 மாதங்களிற்கு மேலாக பயனற்றிருந்ததென வெளிப்படுத்தியிருந்தது.

(iii) ரூபா 138.45 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு சப்ரகமுவ மாகாணத்திலுள்ள கறவனெல்ல மற்றும் எம்பிலிபிற்றிய ஆதார வைத்தியசாலைகளிற்கு மாற்றப்பட்ட 02 சீரீ ஸ்கானர் இயந்திரங்கள் தேவைப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளில்லாமை காரணமாக உரிய வைத்தியசாலைகளின் வளாகத்தில் பயனற்றிருந்தன.

(iv) மத்திய மாகாணத்திலுள்ள கொலன்கொட ஆதார வைத்தியசாலைக்கு ஓட்டோ கிளேவ் (Auto clave) உபகரணம் வழங்கப்பட்ட போதிலும் மின்சாரம் விநியோகிக்கப்படாமை காரணமாக 04 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், அத்தகைய உபகரணத்தின் 02 ஆண்டு உத்தரவாதக் காலப்பகுதியும் முடிவடைந்திருந்தது.

(v) வடமேல் மாகாணத்திலுள்ள தம்பதெனிய ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்காததால் ரூபா 2.68 மில்லியன் பெறுமதியான டயலிஸிஸ் பிரிவிற்கான (Dialysis Unit) தண்ணீர் சுத்திகரிப்புப் பொறியொன்று 2015 திசெம்பர் 15 இலிருந்து பயனற்றிருந்தது.

(vi) ஊவா மாகாணத்திலுள்ள தனமல்வில, மெதகம, இங்கினியாகல, தம்பகல்ல, சியம்பலாண்டுவ, பிபில மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் மெதகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பவற்றில் ரூபா 2.03 மில்லியன் கிரயமான வைத்திய உபகரணம் 2017 யூன் 30 வரையிலும் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அவசர சிகிச்சைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா 2.23 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சத்திரசிகிச்சை உபகரணம் மத்திய மாகாணத்திலுள்ள பொக்கவல பிராந்திய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட உபகரணம் பயன்படுத்தப்படாதிருந்தது. மேலும், மத்திய மாகாணத்திலுள்ள மனிக்கின்ன மாவட்ட வைத்தியசாலையில் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா 406,300 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய ஆய்வுகூட உபகரணம் அவ் வைத்தியசாலைக்கு

வழங்கப்பட்டிருந்தது. ரூபா 39.80 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு மத்திய மாகாணத்திலுள்ள 07 பிராந்திய வைத்தியசாலைகளிற்கு விநியோகிக்கப்பட்ட 20 டெபிபிறிள்ளேற்றர் மொனிற்றர்கள் (Defibrillator Monitors) அவசர சிகிச்சைப் பிரிவுகளிற்கான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாததனாலும் உரிய வைத்தியசாலைகளில் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாமையினாலும் பயனற்றிருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 பெப்ரவரியில் ரூபா 1.23 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 03 மல்ரி பரா மொனிற்றர்களின் (Multi para monitors) வாசிப்பிலுள்ள குறைபாடுகள் 2016 மே 31 ஆம் திகதிய நாவலப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் அவரால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 30 வரையிலும் அத்தகைய குறைபாடுகளை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மத்திய மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளிற்கு ரூபா 1.52 மில்லயன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 254 இரத்த அழுத்த ஆய்வுக்கருவிகளின் (Blood Pressure Apparatus) வாசிப்பிலும் பிழைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், 2016 ஆகஸ்ட்டிலிருந்து அத்தகைய உபகரணம் பயன்பாடற்று வைத்திருக்கப்பட்டன.

(ஈ) சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண சுகாதாரத் திணைக்களம் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள இம்புல்கஸ்தெனியவில் மருத்துவ நிலையத்திற்காக கட்டிடமொன்றை ரூபா 12.54 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திரவியல் அதிகாரசபையுடன் 2016 யூன் 15 இல் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 யூலை 11 இல் அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் இயந்திரவியல் அதிகாரசபைக்கு ரூபா 2.50 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 15 வரையிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மதவாச்சியிலுள்ள ஆதார வைத்தியசாலைகள், ஹிங்குராகொட, கல் அமுன, றம்பேவ, றாஜாங்கனய மற்றும் அத்தனகடவலவிலுள்ள பிராந்திய வைத்தியசாலைகளில் தர முகாமைத்துவப் பிரிவு, கழிவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் அவசர பராமரிப்புப் பிரிவு என்பவற்றிற்கான கட்டிட நிர்மாணம் மற்றும் ஏனைய வேலைகள் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் ரூபா 4.52 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் அவை 2017 யூன் 30 வரை பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.